www.freetnbooks.com

# இரண்டாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு–2025

## ஆறாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம்: 2.00 மணி

## கணிதம்

மதிப்பெண்கள்:60

### பகுதி–I

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

1. இரு அடுத்தடுத்த ஒற்றை எண்களின் வேறுபாடு

   அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 0

2. 7 கி.மீ – 4200மீ–க்கு சமமானது ________

   அ) 3கி.மீ800மீ ஆ) 2கிமீ800மீ இ) 3கி.மீ200மீ ஈ) 2கிமீ.200மீ

3. 2 நாட்கள் = ________ மணி

   அ) 38 ஆ) 48 இ) 28 ஈ) 40

4. ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல்

   அ) 90° ஆ) 100° இ) 180° ஈ) 60°

5. ஒரு முக்கோணத்தின் இரு பக்கங்கள் 5செ.மீ மற்றும் 9செ.மீ எனில் மூன்றாவது பக்கம் ________ ஆகும்.

   அ) 5செ.மீ ஆ) 3செ.மீ இ) 4செ.மீ ஈ) 14செ.மீ

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

6. 29 மற்றும் ________ ஆகிய எண்கள் பகா இரட்டை ஆகும்.
7. இரு அடுத்தடுத்த இரட்டை எண்களின் மீ.பெ.கா. ________ ஆகும்.
8. 450மி.லி x 5 = ________ லி ________ மி.லி.
9. தள்ளுபடி = குறித்த விலை – ________
10. ஒவ்வொரு முக்கோணத்திலும் குறைந்தபட்சம் ________ குறுங்கோணங்கள் இருக்கும்.

**III சரியா, தவறா எனக் கூறுக.** **5x1=5**

11. எந்த எண்ணிக்கையிலான ஒற்றை எண்களைக் கூட்டினாலும் ஓர் இரட்டை எண் கிடைக்கும்.
12. 57 மற்றும் 69 ஆகியவை சார்பகா எண்கள்.
13. புகழேந்தி 100கி வேர்க்கடலை சாப்பிட்டான். அது 0.1 கி.கி.க்கு சமம்.

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



14. இலாபமும் இல்லை, நட்டமும் இல்லை எனில், அடக்க விலை = விற்பனை விலை.

15. 80°, 30°, 40° ஆகிய அளவுகளைக் கொண்டு ஒரு முக்கோணம் அமைக்க இயலும்.

IV பொருத்துக: 5x1=5

| | | |
|---|---|---|
| 16. செங்கோணம் | – | சமபக்க முக்கோணம் |
| 17. 02.20 | – | 1 லிட்டர் |
| 18. அனைத்து பக்கங்களும் சமம் | – | விற்பனை விலை – அடக்க விலை |
| 19. இலாபம் | – | 90° |
| 20. 600மி.லி + 400 மி.லி | – | 2 மணி கடந்து 20 நிமிடங்கள் |

## பகுதி–II

V எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி: 10x2=20

21. மிகச்சிறிய மற்றும் மிகப்பெரிய ஈரிலக்கப் பகா எண்களை எழுதுக.

22. 18, 24 – பகா காரணிப்படுத்துதல் முறையில் மீ.பெ.கா காண்க.

23. 18 மற்றும் 30 ஆகிய எண்களின் மீ.சி.ம. காண்க.

24. தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி மழை அளவு 998மி.மீ. இதனைச் சென்டி மீட்டரில் மாற்றுக.

25. கீழ்க்கண்டவற்றை 12 மணி நேர் அமைப்புக்கு மாற்றுக.


1) 21:10 மணி    2) 00:00 மணி

26. 38 மாதங்களை ஆண்டுகளாக மாற்றுக.

27. ஒரு மேசையானது ரூ.4500 க்கு வாங்கப்பட்டு ரூ.4800க்கு விற்கப்படுகிறது. எனில் இலாபம் அல்லது நட்டம் காண்க.

28. ஒரு முக்கோணத்தின் இரு கோணங்கள் 75°, 35° எனில் மூன்றாவது கோணம் காண்க ?

29. பின்வரும் முக்கோணத்தை பக்கங்கள் மற்றும் கோணங்களின் அடிப்படையில் வகைப்படுத்து.





www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



30. பின்வரும் இயற்கணிதக் கோவையை மரவுரு வரைபடமாக மாற்றுக. 3a - b

31. பின்வரும் மரவுரு வரைபடத்தை எண்கணிதக் கோவையாக மாற்றி எழுதுக.




32. நான், மூன்று கோணங்களும் 60° ஆகக் கொண்ட ஒரு மூடிய உருவம் ஆவேன். நான் யார்?

33. குணா தனது பொருளை ரூ.325 எனக் குறித்து ரூ.30 தள்ளுபடியில் விற்பனை செய்தார். எனில், விற்பனை விலையைக் காண்க.

## பகுதி–III

VI ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி: 5x3=15

34. 15,25,75 – ஆகிய எண்களுக்குப் பகாக் காரணிப்படுத்துதல் முறையில் மீ.சி.ம – வைக் காண்க.

35. ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 100 கிராம் காய்கறிகள் தேவைப்படுகிறது. 90 குழந்தைகள் உள்ள பள்ளிக்கு எத்தனை கிலோ கிராம் காய்கறிகள் தேவைப்படும்?

36. கீழின அலகாக மாற்றுக 15 கி.மீ (மீ, செ.மீ, மி.மீ)

37. பின்வரும் கோண அளவுகளைக் கொண்டு எவ்வகை முக்கோணம் அமைக்க இயலும்?

i) 60°, 60°, 60°

ii) 90°, 50°, 40°


iii) 120°, 40°, 20°

38. ΔABC–ல் பின்வருவனவற்றிற்குப் பெயரிடுக.

அ) மூன்று பக்கங்கள் : ______, ______, ______

ஆ) மூன்று கோணங்கள் : ______, ______, ______

இ) மூன்று முனைகள் : ______, ______, ______




www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



39. பின்வரும் இயற்கணிதக் கோவையை மரவுரு வரைபடமாக மாற்றுக. (x × y) - (y × z)

40. 2020 ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசு தினத்திற்கும் கல்வி வளர்ச்சி நாளுக்கும் இடையில் உள்ள நாட்களைக் கணக்கிடுக.

## பகுதி–IV

**VII ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி: 1x5=5**

41. அ) LM = 6.5 செ.மீ அளவில் ஒரு கோட்டுத்துண்டு வரைக. கோட்டுத்துண்டின் மீது அமையாதவாறு (மேலே/கீழே) P என்ற புள்ளியைக் குறிக்க. மூலை மட்டத்தைப் பயன்படுத்தி P வழியே LM கோட்டுத் துண்டிற்குச் செங்குத்துக்கோடு வரைக.

*(அல்லது)*

ஆ) AB = 6.5 செ.மீ அளவுள்ள ஒரு கோட்டுத்துண்டு வரைந்து கோட்டுத்துண்டிற்கு மேலே M என்ற புள்ளியைக் குறிக்க. M வழியே AB கோட்டுத் துண்டிற்கு இணைகோடு வரைக.

***/***

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner